**OPEN ACCESS**

Manuscript ID:
TAM-06032022-4635

Volume: 6

Issue: 3

Month: January

Year: 2022

P-ISSN: 2454-3993

E-ISSN: 2582-2810

Received: 15.10.2021

Accepted: 22.11.2021

Published: 01.01.2022

Citation:
Sivaramakrishnan, JR. "Devikottai in History." *Shanlax International Journal of Tamil Research,* vol. 6, no. 3, 2022, pp. 109–19.

DOI:
https://doi.org/10.34293/tamil.v6i3.4635

*Corresponding Author:
sivaramanarchaeo@gmail.com

This work is licensed under a Creative Commons Attribution-ShareAlike 4.0 International License

# Devikottai in History

**Dr. J.R. Sivaramakrishnan**
*Assistant Professor, Department of History*
*Kundavai Nachiyar Government Women's Arts College*
*Thanjavur, Tamil Nadu, India*

**Abstract -** Tamil Nadu has been known for its unique art and architecture since the Sangam era. The temples, palaces and other structures found here help to understand the architectural techniques of the Tamils. The Indian architectural tradition in general can be divided into two types. One is biologically related palaces, mansions, halls, shops, constructions in cities, residential complexes located in rural areas. The other is the temples associated with worship. In this context where temple-based studies have been carried out extensively in Tamil Nadu since the European period, it is not uncommon for Tamil Nadu researchers to pay little attention to the study of fortification techniques. Accordingly, this article is based on the data obtained in an attempt to fully unravel the history of Devikottai in the Nagai District.

**Keywords:** Devikottai, Sangakalam, Architecture, Temples, Geography, Archaeological Evidence

**References**

1. Imperial Gazetteer of India, Volume – 11.
2. Madras District Gazetteers South Arcot, Volume - 1.
3. Sokkottai Krishnasami Iyanari South India and his Mohammedan invaders.
4. Srinivasachari, G.S, History of Gingee.
5. Sokkottai Krishnasamy Aiyanagr, Sourves of Vijayanagar History.
6. Naravane, M.S., The Maritime and Costal Forts of India.
7. John Holland Rose, The Cambridge History of British Empire, Vol-VI.
8. The British Diary of Anandarangam Pillai – 1736 – 1761.
9. The British Conquest and Domination of India Penderel Moon.
10. Dupleix and Clive, Henry Dodweel.
11. Vriddhagirisan, V., The Nayaks of Tanjore.
12. D.Y. Sathasiva Bandarathar, Pirkala Cholar Varalaru, Annamalai University, Annamalai Nagar.
13. Nadana Kasinathan, Vanniyar Matchi, Meyyappan Pathipagam, Chidambaram.
14. Puluvar S. Rasu, Tanjore Marattiyar Cheppedugal.
15. Dr. R. Vasanthakumar, Thirugnanasampantha Swamigal Arulaseitha Thevara Tirupatikaganl, Moondram Thirumurai, Panniru Thirumurai Aaivu, Maiyam, Karbagam University, Coimbatore - 21.
16. Kudavayil Balasubramanian, Thanjavur Nayakar Varalaru.

# வரலாற்றில் தேவிக்கோட்டை

*முனைவர் ஜெ. ஆர். சிவராமகிருஷ்ணன்*
உதவிப் பேராசிரியர், வரலாற்றுத்துறை
குந்தவை நாச்சியார் அரசு மகளிர் கலைக்கல்லூரி
தஞ்சாவூர்

***ஆய்வுச் சுருக்கம்***

*சங்ககாலம் தொட்டு தமிழகம் கலை, கட்டடக்கலையில் தனிச்சிறப்பு மிக்கதாக விளங்கி வந்துள்ளது. கோயில்களும், அரண்மனைகளும் இதர கட்டடங்களும் தமிழரின் கட்டடக்கலை நுட்பங்களை அறிந்துகொள்ள துணை நிற்கின்றன. பொதுவாக இந்தியக் கட்டடக் கலை மரபினை இருவகையாகப் பிரிக்கலாம். ஒன்று வாழ்வியல் தொடர்புடைய அரண்மனை, மாளிகைகள், மண்டபங்கள், அங்காடிகள், நகரங்களில் இருந்த கட்டுமானங்கள், ஊரகப் பகுதியில் இடம்பெற்றிருந்த குடியிருப்பு வளாகங்கள் போன்றவை. மற்றொன்று வழிபாட்டுத் தொடர்புடைய கோயில்களாகும். கோயிற்கலை சார்ந்த ஆய்வுகள் தமிழகத்தில் ஐரோப்பியர் காலம் தொட்டு அதிக அளவில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இச்சூழலில், கோட்டைகளின் உருவாக்க நுட்பங்கள் குறித்த ஆய்வுகளில் தமிழ் நாட்டு ஆய்வாளர்கள் போதிய அளவில் கவனம் செலுத்தாதது பெருங்குறையே. அடிப்படையில் நாகை மாவட்டத்தில் உள்ள தேவிக்கோட்டை குறித்த வரலாற்றினை முழுமையாக வெளிக்கொண்டு வரும் முயற்சியில் கிடைத்த தரவுகளை முதன்மைச் சான்றாகக் கொண்டு இக்கட்டுரை உருவாக்கப்பட்டுள்ளது.*

***முக்கியச் சொற்கள்:*** *தமிழக வரலாறு, தேவிக்கோட்டை, சங்ககாலம், கட்டிடக்கலை, கோயில்கள், புவிச்சார் அமைப்பு, தொல்லியல் சான்றுகள்*

## அமைவிடம்

நாகை மாவட்டம், சீர்காழி வட்டத்தில் (E:*11.37.2317*, N:*79.80.6319*) தேவிக்கோட்டை அமைந்துள்ளது. சிதம்பரத்தில் இருந்து கிழக்கே 10 கி.மீ தூரத்தில் கொள்ளிடம் ஆற்றின் வடகரையில் இக்கோட்டை அமையப்பெற்றது. சுமார் 200 ஏக்கர் பரப்பளவைக் கொண்ட சமவெளியில் 100 ஏக்கர் பரப்பளவில் கோட்டை கொத்தளத்தின் தடயங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. கோட்டையின் தெற்குப்பகுதியின் அரணாக அகன்ற கொள்ளிடம் ஆறு அமைந்துள்ளது. கொள்ளிடம் ஆற்றில் இருந்து வெட்டப்பட்ட மிகப்பெரிய கால்வாய் ஒன்று கோட்டையின் மேற்குப் பகுதியில் தொடங்கி நேர்வடக்கே சென்று மீண்டும் கிழக்குப் பகுதி வழியாக கொண்டு வரப்பட்டு கொள்ளிடம் ஆற்றோடு இணைக்கப்பட்டுள்ளது. இக்கால்வாயானது நூறு அடி அகலம் கொண்ட அகழியாக அக்காலத்தில் இருந்துள்ளது. எனவே கோட்டையை மையமாக வைத்து நாற்புறமும் மிகப்பெரிய அகழியுடன் கூடிய நீரரணாக கொள்ளிடம் ஆறு பயன்படுத்தப்பட்டிருப்பது சிறப்பு வாய்ந்த ஒன்றாகும்.

## புவிசார் அமைப்பு

தேவிக்கோட்டை பகுதியானது கொள்ளிடம் ஆறு கடலுடன் கலக்கும் கழிமுகப்பகுதியில் இயற்கையாக அமையப்பட்ட மிகப்பெரிய மனற்குன்றின் மீது கட்டப் பட்டதாகும். இந்த புவிசார் அமைப்பினை எக்கர் எனச் சங்க இலக்கியங்கள் சுட்டுகின்றன. இக்கோட்டையானது கடல் மட்டத்திலிருந்து

ஒரு மீட்டர் உயரத்தில் அமைந்துள்ளது. சுமார் 100 ஏக்கர் பரப்பளவினைக்கொண்ட கோட்டைப் பகுதியைச் சுற்றி நான்குபுறமும் தண்ணீரால் சுழப்பட்டிருந்ததாலேயே வரலாற்று ஆய்வாளர்கள் இதனை தீவுக்கோட்டை எனக் குறிப்பிடுகின்றன. மாங்குரோ மரங்களால் சுழப்பட்ட இந்நிலப்பகுதியில், கோட்டைப் பகுதியை விடுத்த மற்றப் பகுதிகள் சதுப்பு நிலப்பகுதியாகும். இந்த சதுப்புநிலப் பகுதியானது தேவிக் கோட்டையின் மேற்கு, வடக்கு, கிழக்கு பகுதிகளில் சுமார் 7X15X4 கி.மீ தூரத்திற்கு பரவியுள்ளதால் நிலமார்க்கமாக எதிரிகள் கோட்டையை அடைவது மிகக் கடினமாகும். இந்த சதுப்பு நிலப்பகுதியும் அதில் அடர்த்தியாக வளர்ந்துள்ள மாங்குரோ மரங்களும் கோட்டையின் அதிமுக்கிய புவிசார் அரணாக இருந்துள்ளன.

## தொல்லியல் சான்றுகள்

கோட்டையின் உட்பகுதியில் சுமார் 20 ஏக்கர் பரப்பளவில் நடத்தப்பட்ட களஆய்வில் மட்கல ஒடுகள் "ட" வடிவ கூரை ஓடுகளின் உடைந்த துண்டுகள், செங்கற்கள், பீங்கான் துண்டுகள், பச்சை, சிவப்பு நிற மணிகள், முதலாம் இராஜராஜ சோழரின் செப்பு நாணயம், கட்டடங்களின் தரைதளப் பகுதிகள், கோட்டை சுவரின் தரைதளம், இரண்டு கல்வெட்டுகள், பீரங்கிகளுக்குப் பயன்படுத்தப்பட்ட கல்குண்டுகள் போன்ற தொல்சான்றுகள் கண்டறியப்பட்டன. குறிப்பாக கோட்டையின் தெற்குப் பகுதியில் கொள்ளிடம் ஆற்றின் அருகே கிழக்கு மேற்காக நடத்தப்பட்ட ஆய்வியல் "ட" வடிவ கூரை ஓடுகளின் உடைந்த துண்டுகள், சிவப்பு நிற பானை ஓடுகள், இராஜராஜ சோழரின் செப்பு நாணயங்கள், சிவப்பு, பச்சை நிறமணிகள், கட்டடப்பகுதிகள் போன்றவை கண்டுபிடிக்கப்பட்டன. மேலும் கொள்ளிடம் ஆற்றின் வட கரையிலிருந்து 40 அடி தூரத்தில் ஆற்றின் உட்பகுதியில் நீருக்கு அடியில் நான்கடி அகலத்தில் மிகப்பெரிய செங்கற் சுவறொன்று கிழக்கு மேற்காக செல்கிறது. இதற்கு பயன்படுத்தப்பட்டுள்ள செங்கற்கள் 24X15X5 செ.மீ அளவுள்ளவை. இக்கட்டடப் பகுதியின் அமைவியலை பார்க்கும்போது மரக்கலன்களை நிறுத்துவதற்காகப் பயன்படுத்தப்பட்டிருக்கலாம். கோட்டையின் தென்பகுதியில் குடியிருப்புகள் இருந்ததற்கு சான்றாக இங்கு நான்கடி அகலத்தில் செங்கற்சுவர், செங்கற்களால் பாவப்பட்ட தரைதளப்பகுதிகள் காணப்படுகின்றன. இக்கட்டடப் பகுதியில் சேகரிக்கப்பட்ட செங்கற்கள் 4X16X24, 5X13X21 செ.மீ அளவுள்ளவை. இவை கி.பி 11-16 ஆம் நூற்றாண்டை சார்ந்தவைகளாகும். மேலும் இப்பகுதியில் கி.பி.17ஆம் நூற்றாண்டைச் சார்ந்த பூ வேலைப்பாடுகள் மிக்க பீங்கான் துண்டுகளும் சேகரிக்கப்பட்டுள்ளன. கோட்டையின் தென்பகுதியில் உள்ள குளத்தை தூர்வாரும்பொழுது பீரங்கிகளுக்கு பயன்படுத்தப்பட்ட 120 கல் குண்டுகள் வெளிப்பட்டன. இதில் 79 குண்டுகள் ஒரு கிலோ எடையும், 12 குண்டுகள் நான்கு கிலோ எடையையும், 29 குண்டுகள் இரண்டு கிலோ எடையையும் கொண்டவைகளாகும். கோட்டையின் மேற்கு, கிழக்கு, தெற்குப் பகுதிகளில் சிதையுற்ற நிலையில் கல்குண்டுகளின் பாகங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இவைகள் இப்பகுதியில் நடைபெற்ற பீரங்கி தாக்குதலின் சுவடுகளாக கருதலாம். தேவிக்கோட்டை பெருவெளியில் கிடைத்துள்ள தொல்சான்றுகள் கி.பி.10 நூற்றாண்டு முதல் கி.பி.18ஆம் நூற்றாண்டு வரையிலான காலக்கட்டத்தைச் சார்ந்தவைகளாகும்.

## இராஜராஜ சோழனின் செப்பு நாணயங்கள்

தேவிக்கோட்டை பகுதியில் கடந்த 2008ஆம் ஆண்டு முதல் நடைபெற்ற களஆய்வில் இராஜராஜ சோழன் வெளியிட்ட

12 செப்பு நாணயங்கள் மண்ணின் மேற்பரப்பில் இருந்து சேகரிக்கப்பட்டுள்ளன. குறிப்பாக தேவிக்கோட்டையின் தெற்குப்பகுதியில் கொள்ளிடம் ஆற்றினை ஒட்டிய கரைப் பகுதியிலிருந்து எட்டு நாணயங்கள் கிடைத்தன. மீதி நான்கு நாணயங்கள் காளியம்மன் கோயில் முன்பாக உள்ள குளத்தின் கரைப்பகுதியிலிருந்து சேகரிக்கப்பட்டன. நாணயங்களின் முன்பக்கத்தில் நிற்கும் மனித உருவமும், இடதுபக்கத்தில் விளக்கு ஒன்றும் உள்ளன. பின் பக்கத்தில் அமர்ந்த மனித உருவத்தின் கீழே "ஸ்ரீராஜராஜ" என்று மூன்று வரிகளில் நாகரி எழுத்தில் உள்ளது. இதனை ஈழக்காசு என்றும் அழைப்பர். இந்நாணயங்கள் ஒவ்வொன்றும் எட்டு கிராம் எடை கொண்டவைகளாகும். இராஜராஜ சோழனின் செப்பு நாணயங்கள் அதிக எண்ணிக்கையில் தேவிக்கோட்டைப் பகுதியில் கிடைத்திருப்பதால் இப்பகுதி வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதலாம்.

### சோழர்களின் கப்பற்படை தளம்

முதலாம் இராஜேந்திர சோழனின் கங்கை கொண்ட சோழபுரம் என்ற புதிய தலைநகர் முற்றுபெறும்வரை அதாவது கி.பி 1014ஆம் ஆண்டு முதல் கி.பி.1022ஆம் ஆண்டு வரை இராஜேந்திரன் சிதம்பரத்தில் இருந்த மாளிகையில் தங்கியிருந்ததாக தி.வை. சதாசிவபண்டாரத்தார் குறிப்பிடுகிறார். மேலும் "நமக்கு யாண்டு எட்டாவது (கி.பி.1021) நாள் நூற்றேழினால் நாம் பெரும்பற்றப்பூலியூர்விட்ட வீட்டின் உள்ளால் மாளிகையின் கீழை மண்டபம் ராஜேந்திர சோழப் பிரமாதி ராஜனின் நா முண்ணாது விருந்து" என்ற கரந்தைச் செப்பேட்டின் நான்காவது ஏட்டின் உரைநடைப் பகுதியும் இதற்கு வலுச்சேர்க்கும். செந்தமிழ் இதழின் ஆய்வுக் கட்டுரையில் பண்டாரத்தார் முதலாம் இராஜேந்திர சோழன் எட்டாண்டு காலம் சிதம்பரத்தில் தங்கியிருந்ததாகச் சுட்டப்படும் காலக்கட்டம் முக்கியத்துவம் வாய்ந்ததாகும். கி.பி.1014ஆம் ஆண்டு இராஜராஜ சோழன் இறந்தபிறகு, இராஜேந்திரன் சோழப் பேரரசின் மாமன்னனாக அரியணையேறியது; இந்து மகாசமுத்திரம் முழுவதையும் தனது கடலாதிக்கத்தின் கீழ் கொண்டுவரப்பட வெண்டுமென்ற நோக்கில் கி.பி.1017ஆம் ஆண்டு இலங்கை முழுவதையும் வென்றது; கி.பி.1018ஆம் ஆண்டு சேரநாடு மற்றும் அந்நாட்டிற்கு சொந்தமான அனைத்து துறைமுகங்களையும் வென்றது; அதே ஆண்டு அரபிக் கடல் பகுதியில் இருந்த பழந்தீவு பன்னீராயிரம் வெல்லப்பட்டது; கி.பி.1019ஆம் ஆண்டு அரபிக்கடல் பகுதியில் இருந்த சாந்திமாத்தீவு கைப்பற்றப்பட்டது; இடைதுறைநாடு, வனவாசி, கொள்ளிப்பாக்கை, இரட்டப்பாடி, மண்ணை கடாகம், பாண்டிய நாடு போன்றவை கி.பி.1022ஆம் ஆண்டிற் குள்ளாகவே வெற்றி கொண்டது போன்ற ஏகாதிபத்திய படையெடுப்புகளுக்கான அனைத்துத் திட்டங்களும் சிதம்பரம் மாளிகையிலிருந்தே தீட்டப்பட்டிருப்பதாகக் கருத இடமுள்ளது. மேலும் கி.பி.1023ஆம் ஆண்டு இறுதிக்குள் இராஜேந்திரன் தனது கங்கைப் படையெடுப்பை முடித்து கங்கை நீரை கொண்டுவந்து தமது புதிய தலைநகரில் குடியேறினார் (கி.பி.1024). பண்டாரத்தார் குறிப்பிடுவதிலிருந்து கி.பி.1014 முதல் கி.பி.1022 வரை சிதம்பரம் மாளிகையைத் தமது அரசியல் தலைமையிடமாக இராஜேந்திரன் கொண்டிருந்ததற்குக் காரணம், நிலவியல் ரீதியாக அனைத்துச் சூழலும் இங்கு சாதகமாக இருந்ததேயாகும்.

சோழப்பேரரசின் இராஜ்ஜிய விவகாரங்கள் சிதம்பரம் மாளிகையிலிருந்தே தீர்மானிக்கப்பட்டதாகக் கூறுவது ஏற்புடையாதாகக் கொள்வதற்கு இன்னும்

இரு காரணங்கள் உண்டு. அதாவது வெள்ளாறு மற்றும் கொள்ளிடம் ஆறுகள் கடலுடன் கலக்கும் இடைப்பட்டப் பகுதியில் கடல் நீரோட்டமானது கப்பல்களை செலுத்தும் கடலோடிகளுக்கு ஏற்ற சூழலில் அமைந்திருந்தது. குறிப்பாக இக்கடல் வெளியில் பன்னெடும் காலமாகவே 20 நாட்டிக்கல் வேகத்தில் கடல் நீரோட்டம் இருந்து வருவது ஆய்விற்குரிய ஒன்றாகும். இரண்டாவது காரணம் கொள்ளிடம் ஆறு கடலுடன் கலக்கும் பகுதியில் அமையப்பெற்றுள்ள தேவிக்கோட்டையிலிருந்து பழையாறு வழியாகக் கடலை நோக்கி மரக்கலன்களை விரைவாக செலுத்துவதக்கு ஏற்ற ஆழம் கொண்ட நீர்ப்பரப்பினை கொண்டது இப்பகுதியாகும். சோழர் காலத்தில் நாகைப்பட்டினம் மிகச்சிறந்த வர்த்தகத் துறைமுகமாக விளங்கியதைச் செப்பேடு, கல்வெட்டுக்கள் மூலம் அறியமுடிகிறது. இதேபோன்று தேவிக்கோட்டையும் இராஜேந்திரன் காலத்தில் கப்பற்படை தளமாகச் செயல்பட்டிருக்க வேண்டும். மேற்கூறிய இரு காரணங்களையும் சீர்தூக்கிப் பார்க்கும்போது கப்பற்படைகளை நகர்த்துவதற்கான பாதுகாக்கப்பட்ட கடற்படைக்கேந்திரமாக இக்கடற்பரப்பு விளங்கியிருப்பதற்கான சூழல் அதிகமிருப்பதை கவனத்தில்கொண்டால், இராஜேந்திரசோழன் தில்லையம்பதியை தேர்ந்தெடுத்துத் தங்கியதற்கான காரணத்தை அறிய முடியும். அக்காலத்தில் கடலில் ஏற்படும் நீரோட்ட உந்தலினால் கொள்ளிடம் ஆற்றின் வழியாகப் படகின் மூலம் கங்கைகொண்ட சோழபுரத்தை அடைவது எளிதாக இருந்திருக்கவும் வாய்ப்புள்ளது. மேற்கூறிய காரணங்களே சோழ சாம்ராஜ்யத்தின் சிறந்த கடலாளுமை மிக்க பேரரசனாக விளங்கிய இராஜேந்திரசோழன் தஞ்சையை விடுத்து கங்கைகொண்ட சோழபுரத்தை சோழப் பேரரசின் தலைநகராக உருவாக்கியதற்கு முக்கியக் காரணமாகும்.

**தேவாரப் பதிவுகள்**

தேவிக்கோட்டை அமைந்துள்ள பகுதியிலிருந்து நேர் தெற்கே, கொள்ளிடம் ஆற்றின் தென்கரையில் மகேந்திரப்பள்ளி என்ற வரலாற்று சிறப்புமிக்க ஊர் அமைந்துள்ளது. கி.பி.7ஆம் நூற்றாண்டைச் சார்ந்த திருஞானசம்பந்தர் மகேந்திரப்பள்ளிக்கு வருகை புரிந்து இங்குள்ள திருமேனியழகரைப் புகழ்ந்து பாடிய பாடல்கள் மூன்றாம் திருமுறையில் இடம் பெற்றுள்ளன. அப்பாடல்களின் ஊடாக கி.பி.ஏழாம் நூற்றாண்டில் மகேந்திரபள்ளியின் முழு புவிசார் அமைப்பையும் அறியமுடிகிறது. அக்காலக்கட்டத்தில் வங்கக்கடலை ஒட்டியே மகேந்திரப்பள்ளி அமையப் பெற்றிருந்ததையும், கடல்சார் வணிகர்களின் நடவடிக்கைகள் பற்றியும் தாம் யார்த்த பாடலில் தெளிவாகப் பதிவுசெய்துள்ளார்.

**“வங்கமார் சேணுயர் வருகுறி யான்மிகு**
**சங்கமா ரொலியகில் தருபுகை கமழ்தரு**
**மங்கையோர் பங்கினன் மயேந்திரப் பள்ளியுள்**
**எங்கநா யகன்றன திணையடி பணிமினே”**

**(மூன்றாம் திருமுறை - 3132)**

வணிகத்தின் பொருட்டு நெடுந்தூரம் சென்ற கப்பல்கள் திரும்பிவரும் குறிப்பினை ஊரில் உள்ளவர்களுக்கு உணர்த்த ஊதப்படும் சங்கின் ஒலியும், அகிற்கட்டைகளால் தூபம் இடுகின்ற போது உண்டாகும் நறுமணம் கமழும் புகையையுடைய மயேந்திரப்பள்ளியுள், உமாதேவியைத் தன் திருமேனியின் ஒரு பாகமாகக்கொண்டு வீற்றிருந்தருளும் எங்கள் தலைவனான சிவபெருமானின் திருவடிகளை வணங்குவீர்களாக என்ற பாடல் வரிகளில், மகேந்திரப்பள்ளி கடல்சார் வணிகமையமாக இருந்துள்ளதை அறியலாகிறது. எனவே கி.பி.7ஆம் நூற்றாண்டில் கொள்ளிடம் கடலுடன் கலக்கும் பகுதி ஒரு துறைமுகப்பட்டினமாக இருந்துள்ளது என்பதற்கு இப்பாடலைச் சாட்சியாகக் கொள்ளலாம்.

**"நிலத்திலத் தொகைபல நிரைதரு மலரெனச்
சித்திரப் புணரிசேர்ந் திடத்திகழ்ந் திருந்தவன்
மைத்திகழ் கண்டனன் மயேந்திரப்பள்ளியுட்
கைத்தல மழுவனைக் கண்டடி பணிமினே"
(மூன்றாம் திருமுறை - 3133)**

என்ற பாடலில், இறைவனை வழிபடுவதற்கு மலர்களைக் கையால் ஏந்தி வருதல் போல பல முத்துக் குவியல்களை அழகிய கடலானது அலைகளால் கரையினில் சேர்க்க மயேந்திரப்பள்ளியுள் வீற்றிருந்தருளும் இறைவனும், மை போன்று கரு நிறம் கொண்ட கழுத்தையுடையவனும் கையில் மழு என்னும் ஆயுதத்தை ஏந்தியவனுமான சிவபெருமானைத் தரிசித்து அவன் திருவடிகளை வணங்குவீர்களாக. இதன் மூலம் மகேந்திரப்பள்ளியின் கடற்பரப்பின் சிறப்பினை அறிய முடிகிறது. எனவே சோழர் காலத்திற்கு முன்பாகவே பல்லவர் காலத்தில் மகேந்திரப்பள்ளி துறைமுகப் பட்டினமாக திகழ்ந்திருந்ததர்க்கு இப்பாடல்களே தக்கச் சான்றாகும். ஆனால் இன்று கடல் மகேந்திரப்பள்ளியில் இருந்து 3 கி.மீ தூரம் பின்னோக்கி சென்றுவிட்டது. எனவே தேவிக்கோட்டை பகுதியும் இதே காலகட்டத்தில் கடற்கரையை ஒட்டி அமைந்திருந்ததாகக் கருதலாம். குறிப்பாக இப்புவிசார் அமைப்பின்படி தேவிக்கோட்டையின் கிழக்கு பகுதியில் அலைகளையுடைய கடற்பரப்பும், தெற்குப்பகுதி அலைகள் அற்ற கொள்ளிடம் ஆறும் இருந்துள்ளது. இதேபோன்று மகேந்திரப்பள்ளியும் கி.பி.ஏழாம் நூற்றாண்டில் கிழக்கே கடற்பரப்பையும், வடக்கே கொள்ளிடம் ஆற்றையும் அரணாகப் பெற்றிருந்தது. இந்த நிலவியல் அமைப்பு கி.பி.7ஆம் நூற்றாண்டைச் சார்ந்த கடலோடிகளுக்குச் சாதகமாக இருந்ததாலேயே இப்பகுதி கடல்சார் வணிகர்களின் முக்கியக் கேந்திரமாக இருந்திருக்கிறது. மகேந்திரப் பள்ளியில் கடந்த பத்தாண்டுகளுக்கு முன்பாக சிதையுற்ற நிலையில் சமண தீர்த்தங்கரர் சிலை ஒன்று கிடைத்ததாகவும், அதை அரசு அதிகாரிகள் எடுத்துச் சென்றுள்ளனர். சமணம் வணிகர்களோடு தொடர்புடைய சமயமாகும் என்பதை இங்குக் கருத்தில் கொள்ளப்பட வேண்டிய விடயமாகும்.

மகேந்திரப்பள்ளியில் இருந்து வடக்கே கொள்ளிடம் ஆற்றின் வடகரையில் திருக்கழிப்பாலை பால்வண்ணநாதர் சிவன் கோயில் அமைந்துள்ளது. கி.பி.7ஆம் நூற்றாண்டில் இக்கோயிலானது தற்போது கொள்ளிடம் ஆற்றின் வடக்கு கரையில் உள்ள கரைமேடு பகுதியில் அமையப் பெற்றிருந்தது. கொள்ளிடம் ஆற்றின் வெள்ளத்தால் இக்கோயில் அழிவுற்றதால் முன்னூறு ஆண்டுகளுக்கு முன்பு நகராதார் ஒருவர் அவ்விடிபாடுகள் மற்றும் சிலைகளை கொண்டுவந்து சிவபுரிக்கு அருகே பால் வண்ண நாதருக்கு கோயில் அமைத்தார். திருஞானசம்பந்தர் கரைமேடுப் (இது தான் பழைய திருக்கழிப்பாலை) பகுதியில் இருந்த பால்வண்ண நாதரை தரிசித்து பாமாலை கட்டியுள்ளார். அப்பாடல் ஒன்றில்

**"வானி லங்க விளங்கு மிளம்பிறை
தான லங்க லுகந்த தலைவனார்
கானி லங்க வருங்கழிப் பாலையார்
மான லம்மட நோக்குடை யாளோட"
(மூன்றாம் திருமுறை - 3267)**

வானம் பிரகாசிக்க விளங்கும் இளம்பிறைச் சந்திரனை மாலைபோல் விரும்பி அணிந்த தலைவரான சிவ பெருமான், கடற்கரைச் சோலையாக விளங்கும் திருக்கழிப்பாலையில் மான் போன்ற பார்வையுடைய, உமாதேவியாரோடு வீற்றிருந்தருளுவதாகக் குறிப்பிடுகிறார். இப்பாடலின் மூலம் கி.பி.7ஆம் நூற்றாண்டில் திருக்கழிப்பாலை கடற்கரைச் சோலையின் ஊடாக அமைந்திருந்ததை

இப்பாடலில் பதிவு செய்கிறார். எனவே திருக்கழிப்பாலையை அடுத்து இருந்த தேவிக்கோட்டைப் பகுதியின் பசுமைவெளியைதான் சம்பந்தர் கடற்கரைச் சோலை என குறிப்பிட்டுள்ளார்.

கங்கைப் படையெடுப்பை வெறும் நிலவழிமார்க்கமான படையெடுப்பு என்றே வரலாற்று அறிஞர்கள் சுட்டுகின்றனர். இராஜேந்திரனால் துவங்கப்பட்ட இந்த வடபுல படையெடுப்பானது கடல் நிலவழிப் படையெடுப்பாகப் பார்க்க வேண்டும். நிலவழியாக உத்திரலாடம், வங்கதேசம் வரை படைகளை நகர்த்தி செல்வது என்றால் ஏகப்பட்ட காலவிரையம், மனித ஆற்றல் இழப்பு போன்றவற்றைத் தவிர்க்க எண்ணியே இராஜேந்திர சோழன் கடல், நிலவழியாக தமது படைநகர்வுகளை முன்னெடுத்துச் சென்றிருக்க வேண்டும். கங்கைப்படையெடுப்பின் போது வெல்லப்பட்ட சக்கரக்கோட்டம், மதுரைமண்டலம், நாமனைக்கோனை, பஞ்சப்பள்ளி, மாசுனிதேசம், யயாதிநகர், ஒட்டதேசம், தென்கோசலம், மகேந்திரகிரி, தண்டபுத்தி, தக்கணலாடம், உத்தரலாடம், வங்காளதேசம் போன்ற நாடுகளில் பெரும்பான்மை நாடுகள் வங்கக்கடலை ஒட்டியிருந்த நாடுகளேயாகும். மேலும் யயாதிநகர் அருகே இருந்த ஒட்டதேசம் வரை படை நடத்திச் சென்ற இராஜேந்திரன் ஒடிசா பரூவா துறைமுகத்திலிருந்து சுமார் 20 கி.மீ தூரத்தில் அமைந்துள்ள மகேந்திரகிரி மலையில் ஜெயஸ்தம்பம் நாட்டு விழாவின் போது ஒட்டதேச வெற்றிக்கு தோள் கொடுத்த தனது தளபதிக்கு வீர அங்குசத்தையும் விட்டி வாரணமல்லன் என்ற விருதையும் வழங்கிவிட்டு பிறகு, கங்கை படையெடுப்பின் பொறுப்பினை தமது படை தளபதிகளிடமே ஒப்படைத்துவிட்டு ராஜமுந்திரியின் தென்கிழக்கே உள்ள கோதாவரி ஆற்றுப்பகுதியில் வந்து தங்கினான். மகேந்திரகிரி மலைக்கு அருகே ஒட்டதேசத்தின் புகழ்பெற்ற பரூவா துறைமுகத்தை அடைந்து கடல்வழியாகவே இராஜேந்திர சோழன் கோதாவரியை அடைந்திருக்க வேண்டும்.

### ஜெயங்கொண்டப் பட்டினம்

தேவிக்கோட்டையின் முந்தையப்பெயர் ஜெயங்கொண்டப்பட்டினம் என்பதாகும். இதனை எஸ்.கிருஷ்ணசுவாமி ஐயங்கார் அவர்கள் எழுதிய South India And Her Muhammadan Invaders என்ற நூலின் மூலம் அறியமுடிகிறது. “A little way to the north of it was Nagapatam, Kaveripatam at the mouth of the Kaveri, Jayangondapattanam near the mouth of the coleroon and so on. “..page no:65 எனவே ஐயங்கார் அவர்கள் சுட்டுவதிலிருந்து கொள்ளிடம் ஆற்றின் கழிமுகப்பகுதியில் வங்கக் கடலை ஒட்டியவாறு ஜெயங்கொண்டப்பட்டினம் என்ற கடற்கரை இருந்துள்ளதை அறியலாகிறது. இன்று தேவிக்கோட்டை என்று அழைக்கப்படும் பகுதியேஅக்காலத்தில்ஜெயங்கொண்டப்பட்டினமாக விளங்கியிருக்கிறது. இராஜேந்திர சோழனின் மகன் முதலாம் இராஜாதிராஜனின் விருது பெயர்களுள் ஒன்று ஜெயங்கொண்டான் என்பதாகும். அதன் நினைவாகவே இத்துறைமுகப்பட்டினத்திற்கு ஜெயங்கொண்டப்பட்டினம் எனப் பெயர்சுட்டப்பட்டிருக்க வேண்டும். பழைய திருக்கழிப்பாலைக்கு மேற்கே கொள்ளிடம் ஆற்றின் வடகரையில் ஜெயங்கொண்டப்பட்டினம் என்ற ஊர் அமைந்துள்ளது. ஆனால் 1906 ஆம் ஆண்டு நில பைசல் ஆவணத்தில் தேவிக்கோட்டைப் பகுதி ஜெயங்கொண்டப்பட்டினத்தின் உட்கிடைப்பகுதியாக இருந்தது என்று, சிவபுரி பழைய கணக்குப் பிள்ளைக் குடும்பத்தைச்சார்ந்த மாதவன் (நேர்காணல் 07.10.2008) அவர்கள் தெரிவித்துள்ளார். எனவே திருஞானசம்பந்தரின் பாடல்கள், பிற்கால நிலபரிவர்த்தனை ஆவணம்,

எஸ்.கிருஷ்ணசுவாமி ஐயங்கார் அவர்களின் பதிவுகள் போன்றவற்றின் ஊடாக சுமார் 1000 ஆண்டுகளுக்கு முன்பிருந்தே கொள்ளிடம் ஆற்றின் கழிமுகப்பகுதி துறைமுகப்பட்டினமாக விளங்கியுள்ளதை அறியமுடிகிறது.

### தேவிக்கோட்டை பற்றிய குறிப்பு

தேவிக்கோட்டையை பற்றி ஆங்கிலேயர்களின் குறிப்புகள் கொடியம்பாளையம் பகுதியில் தேவிக்கோட்டை தீவு உள்ளது. அத்தீவில் உள்ள கோட்டை ஒரு மைல் சுற்றளவு கொண்டதாகும். சமமற்ற ஆறு பக்கங்களுடன் நான்கு திசைகளிலும் பீரங்கி மேடையுடன் கோட்டை காணப்பட்டது. பதினெட்டு அடி உயரம் கொண்ட கோட்டை சுவர் முழுவதும் லேட்ரைட் மற்றும் செங்கற்களால் கட்டப்பட்டிருந்ததாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. கிருஷ்ணசாமி ஐயங்கார் தமது நூலில் (South India and Her Muhammadan Invaders, Page. No : 111 – 112) முகமதியர்களால் ஜல்கோட்டா என்று அழைக்கப்பட்ட பகுதியே இத்தீவுக்கோட்டையாகும் என்று சுட்டுகிறார். ஜல்கோட்டா என்றால் ஆழமான நீர்ப்பகுதியால், சூழப்பட்ட தீவில் அமைந்த கோட்டை என்பது இதன் பொருளாகும். மேலும் அமீர் குஸ்ரூவின் குறிப்புகளை ஆராய்ந்த ஐயங்கார் மாலிக்காபூரின் படைகள் தமிழகத்தில் நுழைந்தபோது வீரபாண்டியன் தேவிக்கோட்டையில் அடைக்கலம் புகுந்ததாகவும் குறிப்பிடுகிறார்.

### தேவிக்கோட்டை சோழகனார்

தஞ்சையை இரகுநாதநாயக்கர் ஆட்சி செய்தபொழுது (கி.பி.1600-1645) தேவிக்கோட்டையைத்தலைமையிடமாகக் கொண்டு சோழகன் என்பவர் ஆட்சி செய்துள்ளார். இவர் செஞ்சி நாயக்கரான கிருஷ்ணப்பநாயக்கரின் ஆளுமைக்குரிய செஞ்சி மகாநாயக்கதானத்தின் ஒரு பகுதியின் தலைவனாக விளங்கியவர். சோழகன் கடலூர் பகுதியில் வர்த்தக நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த போர்த்து கீசியர்களிடம் நட்புடன் இருந்தான். போர்த்துகீசிய ஏசு சபையைச் சேர்ந்த பாதிரியார் பிமெண்டா என்பவர் தமது குறிப்புகளில் சோழகனார் பற்றி பெருமையாகச் சுட்டுகிறார். கி.பி.1597ஆம் ஆண்டு கிருஷ்ணப்பரின் அரசவைக்குச் சென்ற பிமெண்டா செஞ்சி அரசருக்குக் கட்டுப்பட்ட சிற்றரசாகத் தேவிக்கோட்டை சோழகனையும், வேலூர் லிங்கமநாயக்கரையும் குறிப்பிடுகிறார். தாம் செஞ்சியில் தங்கியிருந்தபொழுது சோழகனின் பதினான்கு வயது மகன், அமைச்சர்கள், அறிஞர்கள் உள்ளிட்டோருடன் வந்திருந்து கிருஷ்ணப்பரின் பெயரை தனது பெயருக்குப் பின் சேர்த்துக்கொள்ள அனுமதிக்க வேண்டுமென்றும் தங்க நாற்காலி, கொஞ்சம் நிலமும் வழங்குமாரு சோழகனின் மகன் கிருஷ்ணப்பரிடம் கேட்டதாகத் தமது ஆவணத்தில் கூறுகிறார். விடைபெற்றுச் சென்ற இளம் சோழகனை பாதுகாப்பாகத் தேவிக்கோட்டையில் சேர்க்குமாறு தமது படைவீரர்களுக்குச் செஞ்சி மன்னர் உத்தரவிட்டதாகப் பிமெண்டா தமது குறிப்பில் எழுதியுள்ளார்.

பாதிரியார் டுஜெரிக் என்பவர் எழுதிய குறிப்புகளில் இருந்து தேவிக்கோட்டையைத் தலைமையிடமாகக்கொண்டு செஞ்சி ராஜ்ஜியத்தின் தென்கிழக்குப் பகுதியான சிதம்பரம், புவனகிரி பகுதிகளைச் சோழகன் ஆட்சி செய்தார் என்பதை அறியமுடிகிறது. சோழகனிடமிருந்து கி.பி.1615ஆம் ஆண்டு தேவிக்கோட்டையைக் கைப்பற்றிய இரகுநாதர் புவனகிரியில் நடைபெற்ற போரில் சோழகனுக்கு துணைநின்ற செஞ்சி மன்னன் கிருஷ்ணப்பரையும் தோற்கடித்தார். புவனகிரி கோட்டையும் தஞ்சை வசமானது. தேவிக்கோட்டை சோழகனைப் பற்றி இராமபத்ராம்பா என்ற பெண்பாற் புலவர்

எழுதிய இரகுநாதப்யுதயம் என்ற நூலில் இரகுநாத நாயக்கர் தன்னுடைய அமைச்சர்களிடம் இடப்பட்ட கட்டளைகளில் ஒன்று தீவுக்கோட்டை சோழகனை நிர்மூலமாக்குவது. இதற்காக பெரும்படையுடன் காவிரி ஆற்றின் கரை வழியே கும்பகோணம் வந்தடைந்தான். பிறகு கடலோரத்தில் இருக்கும் சோழகனின் கோட்டையைத் தாக்குவதற்காகக் கொள்ளிடத்தின் தென்கரையில் உள்ள மகேந்திரப்பள்ளியில் முகாமிட்டான். கொள்ளிடம் ஆற்றின் தென்கரையில் பீரங்கி மேடைகள் அமைக்கப்பட்டு தேவிக்கோட்டையின் தென்பகுதியை தாக்கினான். யானைகளின் உதவியால் கொள்ளிடம் ஆற்றைக் கடந்த தஞ்சைப்படைகள் கோட்டையை முற்றுகையிட்டன. கோட்டையின் அகழியில் வளர்க்கப்பட்டிருந்த முதலைகளிடமிருந்து தப்பிப்பதற்காக நீண்ட ஏணிகளைப் பயன்படுத்தி அகழியைக் கடந்த படைவீரர்கள் கோட்டையைத் தாக்கினர். சோழகனின் படைகள் கோட்டைக்குள் இருந்து நெருப்பு, கற்களைக் கொண்டு தாக்கி தஞ்சை படைக்குப் பெறும் சேதத்தை ஏற்படுத்தின. இதனால் கோபமுற்ற தஞ்சைப்படையினர் கோட்டைச்சுவரைப் பீரங்கிகளால் தாக்கி சிதைத்தனர். கோட்டையினுள் சென்ற வீரர்களால் சோழகன் தோற்கடிக்கப்பட்டான். போர்களத்தில் தப்பிக்க முயன்ற சோழகன் கைது செய்யப்பட்டுச்சிறையில் அடைக்கப்பட்டதாக அவ்விலக்கியத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

தேவிக்கோட்டை சோழகனைப் பற்றியும் மேற்கண்ட போருக்கான காரணங்களையும் கூறும் மற்றொரு நூல் சாகித்தியரத்னகாரம். இது இரகுநாத நாயக்கரின் அவைக்களப் புலவர்களில் ஒருவரான யக்ஞநாராயண தீட்சிதரால் எழுதப்பட்டதாகும். இந்நூலில் தஞ்சை அரண்மனைக் கொலு மண்டபத்தில் அச்சுதப்ப நாயக்கர் இரகுநாத நாயக்கருடன் அமர்ந்திருந்தபோது அமைச்சர் கோவிந்த தீட்சிதர் தேவிக்கோட்டை சோழகனின் கொடுஞ்செயல்களை எடுத்துக்கூறி அவனை அழிப்பதற்கான ஏற்பாடுகளை செய்யுமாறு மன்னரிடம் வேண்டினர். உடனே மன்னரும் காலாட்படை, குதிரைப்படை, யானைப் படைகளுடன் தனது தலைநகரிலிருந்து தேவிக்கோட்டை நோக்கிப் புறப்பட்டதைக் கூறுகிறார். கவசமணிந்த யானைகள் மீது இரும்பு அம்பாரிகள் கட்டப்பட்டிருந்தன. குதிரைகள் மீது அமர்ந்திருந்த வீரர்கள் நீண்ட தலைப்பாகை அணிந்திருந்தனர். அவர்களது கைகளில் வில்லும், அம்பும் இருந்தன. அணிவகுப்பில் ஒட்டகப்படை, முகமதிய வீரர்களும் படையில் இருந்ததாக இவ்விலக்கியம் கூறுகிறது. மேலும் படைவீரர்கள் வில், அம்பு, வாள், நலிகாயுதம், அனல்வர்த்தி (துப்பாக்கியாக இருக்கலாம்) போன்ற ஆயுதங்களுடன் இருந்ததாகவும், இரகுநாதர் கவசமணிந்து வெள்ளை யானையில் புறப்பட்ட குறிப்பினையும் காணமுடிகிறது. தேவிக்கோட்டையை முற்றுகையிட்ட தஞ்சைப்படை அக்நியந்திரங்களால் தாக்கிக் கோட்டையைக் கைப்பற்றியதுடன் சோழகனையும் அவனது குடும்பத்தையும் கைது செய்து சிறையில் அடைத்ததைச் சாகித்தியரத்னகாரமும் சுட்டுகிறது.

இரகுநாத நாயக்கனின் அரசவைக்கு வந்த பிராமணர்கள் சோழநாட்டிலிருந்து வரும் வழிப்போக்கர்களுக்கும், பெண்களுக்கும் சோழகன் செய்த தொந்தரவுகளைப் பற்றிக் கூறும்போது, தண்ணீர்ப் பந்தலை நாடிவரும் வழிப்போக்கர்களுக்குக் காய்ச்சிய ஈயத்தைக் கொடுத்து குடிக்கச் செய்தான் என்றும் தஞ்சையிலிருந்து வருபவர்களைப் பிடித்து வரச்செய்து கோணிப்பைகளில் இட்டு நசுக்கிக் கொள்ளிடம் ஆற்றில் வீசச் செய்தான் என்றும் கைதிகளின் உடலில் கூரிய ஊசிகளைச் செலுத்தி சித்திரவதை செய்து, அகழியில், வளர்க்கப்பட்ட

முதலைகளுக்கு அவர்களை உணவாக்கினான் என்றும் சாத்தியரத்னாகரம் கூறுகிறது. இராமபத்ராம்பா குறிப்பிடும் போது, இராவணனுக்கு பத்து தலை சோழகனுக்கு ஒரு தலை இதைத்தவிர குறிப்பிடும்போது இராவணனுக்கும் சோழகனுக்கும் எந்த வித்தியாசமும் இல்லை என்றும், புகழ்பெற்ற விஜயநகர ஆளுநரான விட்டலாராஜா போன்றவர்களால்கூட சோழகனை வெல்ல முடியாமல் தோல்வியுற்றனர். இவன் பைரவரை வழிபட்டு வந்ததாகவும் இரகுநாதப்யுதயத்தில் அவர் குறிப்பிடுகிறார். இவ்வாறு தஞ்சை இரகுநாதநாயக்கரின் அவைக்களப் புலவர்கள் விசுவாசம் மிக்க தமது மன்னரின் மேலான்மையை ஏற்காத பிற நாட்டவரைக் கொடுங்கோலனாக மிகைப்படுத்திப் பாடியுள்ளதை இயல்பான ஒன்றாகவே கருதவேண்டும். காரணம் சோழகன் செஞ்சி நாயக்க மன்னர்க்கு கட்டுப்பட்ட அரசன். இவன் தஞ்சை அரசனுக்குக் கீழ்படியும் அவசியமில்லை. கொள்ளிடம் ஆற்றின் தென்பகுதி தஞ்சை மன்னனின் ஆதிக்கத்திற்கு உட்பட்டப்பகுதி. எனவே எல்லைப்புறத்தில் இருந்த மக்களுக்கு இவன் கொடுங்கோலனாகத் தெரிந்திருக்கலாம். தஞ்சை நாயக்கர்களின் வீழ்ச்சிக்குப்பிறகு மராட்டியர்களின் வசமானது தஞ்சையின் நிர்வாகம். அதே காலக்கட்டத்தில் தேவிக்கோட்டையும் மராட்டியர்களின் வசமாயிற்று.

### ஆகிலேயர்களின் கீழ் தேவிக்கோட்டை

எலிகு ஏல் என்ற ஆங்கிலேயர் செஞ்சி மன்னன் ராமராஜரிடம் சிறிதளவு நிலத்தை விலைக்குவாங்கினார்.அங்குகி.பி.1683ஆம் ஆண்டு புனித டேவிட் கோட்டையை கட்டினார். ஆங்கிலேய பேரரசிற்கு அடித்தளமிட்ட இராபர்ட் கிளைவ் கி.பி.1757 வரை கடலூரில் தங்கியிருந்தார். தேவனாம்பட்டினம் புனித டேவிட் கோட்டையையும், கடலூர் பழையநகரில் இருந்த பேக்டரி ஹௌசையும் முக்கிய இராணுவ மற்றும் வர்த்தகக் கேந்திரங்களாக கிளைவ் உருவாக்கினார். கடலூர் புனித டேவிட் கோட்டை தமிழகத்தின் முதல் தலைநகரமாகப் பிரிட்டிஷ் கிழக்கிந்திய கம்பெனியார் உருவாக்கியிருந்தனர்.

### தேவிக்கோட்டை முற்றுகை

தஞ்சை மராட்டிய மன்னன் சாயாஜிக்கும், பிரதாப்சிங்கிற்கும் இடையே அரியணைப் போட்டி நடைபெற்றது. இச்சூழலில் சாயாஜி தமக்கு தஞ்சை அரியணையை மீட்டுக்கொடுத்தால் டேவிட் கோட்டைக்கு அருகே உள்ள தேவிக்கோட்டையை பிரிட்டிஷாருக்குத் தருவதாகக் கூறினார். இதனையேற்ற பிரிட்டிஷ் தளபதி ஜேம்ஸ்கோப் தம்மிடமிருந்த 430 ஐரோப்பிய வீரர்கள், 1000 நாட்டுப்படை வீரரர்களைக் கொண்டு தேவிக்கோட்டையைத் தாக்க முற்பட்டார். ஆனால் போதிய தளவாடங்கள் இல்லாததால் முற்றுகையைவிட்டு கடலூர் திரும்பினார். அதன்பிறகு மேஜர் ஸ்டிரிங்கர் லாரன்ஸ் தலைமையில் படை அனுப்பப்பட்டது. இப்படை தேவிக்கோட்டையை முற்றுகையிட்டு கடுமையாகத் தாக்கியது. ஒரு கட்டத்தில் பிரிட்டிஷ் படைகள் நிலைகுலைந்து போயின. இந்த இக்கட்டான சுழ்நிலையில் தமது நம்பிக்கைக்குரிய சில வீரர்களோடு கோட்டையின் மையப்பகுதிக்கே சென்று தீரத்துடன் போர் செய்து கோட்டையைத் தமது முழுக்கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவந்தார் இராபர்ட் கிளைவ். இந்தத் தீரச் செயல்தான் இராபர்ட் கிளைவ்விற்கு மேஜர் ஜெனரல் பதவியை பெற்றுத்தர காரணமாக அமைந்தது. ஆங்கிலேயரிடமிருந்து பிரான்ஸ் நாட்டுத் தளபதி லாலி கி.பி.1758ஆம் ஆண்டு தேவிக்கோட்டையைக் கைப்பற்றி அழித்தார். கி.பி.1760ஆம் ஆண்டு மீண்டும் தேவிக்கோட்டையை கைப்பற்றிய ஆங்கிலேயர்கள் அதனைத் தங்களது பொழுது போக்கு மையமாக மாற்றியமைத்துக் கொண்டனர். ஆனால்

கொள்ளிடம் ஆற்று வெள்ளத்தால் அடிக்கடி பாதிக்கப்பட்டுக் கோட்டை கொத்தலங்கள் அழிவுற்றதாக ஆங்கிலேயர்களின் குறிப்புகள் உணர்த்துகின்றன.

## முடிவுரை

சங்க இலக்கியத்தில் எயில் என்ற சொல்லாடல் கோட்டையை குறிக்கும் பொதுச் சொல்லாகப் பயன்படுத்தப்பட்டது. அகழி, மதில், நுழைவாயில் அதையடுத்த நகரம், வீதிகள், அங்காடிகள், படைச்சேரி, அரண்மனைவளாகம் போன்றவற்றை உள்ளடக்கியதே எயிலாகும். தற்காலத்தில் பயன்படுத்தப்படும் கோட்டை என்ற சொல் விஜயநகர காலத்திலிருந்து புழக்கத்திற்கு வந்ததாகும். மேலும் கோட்டை என்பது பன்னெடுங்காலமாக நாட்டின் தலைநகரில் மட்டுமே உருவாக்கப்பட்டிருந்தது. அதன் கட்டுமானங்கள் அனைத்தும் நிலவியல் சாஸ்திர இலக்கண சட்டத்திற்குட்பட்டதாகவே இருந்தது, பண்டைய தமிழகத்தில் வாழ்ந்த வேள்குடிகள் தங்களின் விளைநிலங்களையும், ஆநிரைகளையும் எதிரிகளிடமிருந்து காக்கும்பொருட்டு தம் வாழ்விடத்தைச் சுற்றி வலிமையான வேளிகளை அமைத்திருந்தனர். இந்த வேளிகளே பின்னாளில் “கடிமதிலாக” மாற்றமுற்றது. தமிழகத்தில் உள்ள ஒவ்வொரு கோட்டையின் பின்புலத்தை ஆராயப்படும் பொழுது அதன் கட்டுமான நுட்பங்களோடு அங்கு வாழ்ந்த மன்னர்களின் பன்முக வரலாற்றினை அறிந்துகொள்வது எளிதாகும். இதனையே நோக்காகக்கொண்டு தேவிக்கோட்டையைப் பற்றி திரட்டப்பட்ட சான்றுகளைக் கொண்டு அதன் வரலாற்றுப் பின்புலம் இக்கட்டுரையில் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. எதிர்காலத்தில் இங்கு விரிவான நீரடி நிலஅகழாய்வுகள் மேற்கொண்டால் தேவிக்கோட்டையின் முழுமையான வரலாற்றினை அறிந்து கொள்ள முடியும்.

## நோக்கு நூல் பட்டியல்

1. Imperial Gazetteer of India Volume – 11
2. Madras District Gazetteers, South Arcot Volume – 1.
3. Sokkottai Krishnasamy Aiyanagr, South India and Her Muhammadan Invaders.
4. G.S.Srinivasachari, History of Gingee.
5. Sokkottai Krishnasamy Aiyanagr, Sourves of Vijayanagar History.
6. M.S.Naravane, The Maritime and Costal Forts of India.
7. John Holland Rose, The Cambridge History of British Empire Vol-VI
8. The British Diary of Anandarangam Pillai – 1736 – 1761.
9. The British Conquest and Domination of India Penderel Moon.
10. Dupleix and Clive, Henry Dodweel.
11. V.Vriddhagirisan, The Nayaks of Tanjore.
12. தி.வை.சதாசிவ பண்டாரத்தார், பிற்காலச் சோழர் வரலாறு, அண்ணாமலைப் பல்கலைக்கழகம், அண்ணாமலைநகர்.
13. நடன காசிநாதன், வன்னியர் மாட்சி, மெய்யப்பன் பதிப்பகம், சிதம்பரம்
14. புலவர் செ.இராசு, தஞ்சை மராட்டியர் செப்பேடுகள்.
15. டாக்டர். இராச. வசந்தகுமார், திருஞானசம்பந்த சுவாமிகள் அருளியச் செய்த தேவாரத் திருப்பதிகங்கள், மூன்றாம் திருமுறை, பன்னிரு திருமுறை ஆய்வு மையம், கற்பகம் பல்கலைக்கழகம், கோவை.
16. குடவாயில் பாலசுப்பரமணியன், தஞ்சாவூர் நாயக்கர் வரலாறு.